செய்தி வெளியீடு எண்.12 நாள்: 5–1–2010

**<u>தமிழக அரசின் உயர்கல்வித் துறை ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றிவரும் சிறப்பான சேவைகளைப் பாராட்டி தமிழக அரசுக்கு அரிசன சேவக சங்கம் விருது ! முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு</u>**

தமிழக அரசின் உயர்கல்வித் துறை, ஆதி திராவிட சமுதாய முன்னேற்றத்திற்கு, குறிப்பாக அச்சமுதாயத்தின் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் உறுதியான முன்னேற்றத்திற்கு வழிவகுத்திடும் நோக்கில், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் கல்லூரி உதவிப் பேராசிரியர் நியமனங்கள், அருந்ததியர் இட ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகைகள் முதலான பல்வேறு ஆக்கபூர்வமான சேவைகள் ஆற்றி வருவதைப் பாராட்டும் வகையில், அண்ணல் காந்தியடிகளால் நிறுவப்பட்ட அரிசன சேவக சங்கம், தனது வைர விழாவை முன்னிட்டு, தமிழக அரசின் உயர்கல்வித் துறைக்கு, ‘ஹரிஜன் பந்து விருது’ வழங்குவதாக அறிவித்துள்ளது என்றும், அந்த விருது 9–1–2010 அன்று சென்னையில் நடைபெறும் விழாவில் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் வழங்கப்பட உள்ளதை அறிந்து தன்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டினையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தெரிவித்துள்ளார்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.